[1981 மார்ச் 5]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : அந்தக் குறிப்பு என்னிடம் இல்லை. ஆகவே தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பாலியஸ்டர் நூல் கொடுக்கப்படவில்லையென்பதோடு, தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களுக்கு நீண்ட நாட்களாக சேரவேண்டிய ரிபேட்டை இந்த பஞ்ச நேரத்திலாவது திருப்பிக் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுமா? பரமக்குடி போன்ற இடங்களில் நாற்பது லட்சம் ரூபாய்க்கு மேல் துணித் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தள்ளுபடி செய்யப்பட்ட தொகையைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கி வருகிறது இந்த அரசு. அதோடு தேக்கத்தை நீக்குவதற்காகத்தான் இந்தியாவில் உள்ள பல மாநிலங்கள் ஈடுபடுவதுபோல் பல மாநிலங்கள் ஒன்று சேர்ந்து கைத்தறி எக்ஸ்போ ஒன்று ஏப்ரல் மாத முதல் வாரத்தில் நடத்த இருக்கிறது. அதில் விசேஷ தள்ளுபடியும் இருக்கிற காரணத்தால் தேக்கத்தை ஓரளவு குறைக்கலாம் என்று இந்த அரசு எண்ணியிருக்கிறது.

கதர் மற்றும் கைத்தறி துணிகளுக்கான தள்ளுபடி

*வினா எண் 393— திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு கைத்தறி-கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா:

கதர் மற்றும் கைத்தறித் துணிகளுக்கு ஆண்டு முழுவதும் கணிசமான தள்ளுபடி அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : விழாக் காலங்களில் மட்டும் கதர் மற்றும் கைத்தறித் துணிகளுக்கு கணிசமான அளவு தள்ளுபடி இப்பொழுது அரசு அளித்து வருகிறது.

திரு. த. ஆறுமுகம் : விழாக் காலங்களில் மட்டும் கதர்-கைத்தறிக்கு தள்ளுபடி கொடுக்கப்படுகிறது. ஆனால், துணித் தேக்கம் அதிகமாக இருப்பதால் ஆண்டு முழுவதும் தள்ளுபடி கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: இந்த தள்ளுபடி செய்வதன் நோக்கமே நெசவாளர்களுக்கு உதவுவதற்காகத்தான், ஆனால், இவர்கள் திறமை வெளிப்பட ஆரம்பித்தவுடன் இதற்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கிறது

ள்ளுபடி செய்வது நேரடியாக நெசவாளர்களுக்குப் போய்ச் ஏசராத காரணத்தால் இதை படிப்படியாகக் குறைக்க வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கம். ஆகவே, தேக்கம் ஏற்படுகிறது என்றால் மட்டும் விசேஷ தள்ளுபடிகள், துல்லது விசேஷ காலங்களில் தள்ளுபடிகள் இந்த அரசு கொடுத் அக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : கைத்தறி நெசவாளர்களுக்கு, ஸி. டி. எஃப். அமல்படுத்தப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் இப் போது கிடையாது. ஆனால், அந்தத் திட்டத்தின்கீழ் பிடிக்கப் பட்ட தொகைகள் அந்தந்த நெசவாளர்களுக்கு திருப்பிக் கொடுக் கப்படாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் இலட்சக்கணக்கான ரூபாய் நெசவாளர்களுக்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே, நெசவாளர்களின் தற்போதைய நிலைமையைக் கருதி உடனடியாக இந்த ஸி.டி.எ.ப். தொகை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியை இப்போது குடும்ப நிதியோடு இணைத்து, ஒரு குடும்பத்தின் தலைவன் இறந்து விட்டால் 500 ரூபாய் கொடுப்பது என்று இருந்ததை மாற்றி, இப்போது 3,000 ரூபாய் கொடுப்பதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்து கொடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியைப் பொறுத்த வரையில் எந்த அரசும் செய்யாத அளவுக்கு இந்த அரசு தள்ளுபடி வழங்கி இருக்கிறது, தீபாவளி, பொங்கல் திருவிழாக்களின்போது 30 சதவீதம் தள்ளுபடி செய்து விற்பனை செய்யப்படுகிறது. அப்போது பெரும்பாலான தனி யார்கள் அதை வாங்கி வைத்துக்கொண்டு, பின்னால் அதிக விலைக்கு விற்று இலாபம் அடைந்து வருகிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அதனால் பொதுமக்கள் நேரடியாக பய னடைவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை மனதிலே கொண்டுதான், தள்ளுபடிக்கு அதிக மான முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்பதை இந்த அரசு மனதிலே கொண்டிருக்கிறது. காரணம், நெசவாளர்களுக்கு இதனால் பலனில்லை. முதலாளிகளும், இடைத்தரகர்களும் இதிலே பலனடைகின்ற காரணத்தினால், படிப்படியாக குறைப் பதை இந்த அரசு நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

1981 மார்ச் 5]

திரு. இரா கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீபாவளிக்குப் பிறகு கைத்தறி உற்பத்தித் நிலையங்களிலே தேக்கம் இருந்து வருகிறது. எனவே, கைத்தறித் துணிகளை தற்சமயம் விற்பனை செய்வதற்கு இந்த அரசு விசேஷ தள்ளுபடியை அமுல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதை மனதிலே கொண்டுதான், கைத்தறி எக்ஸ்போ பொருட்காட்சிக்கு பல மாநிலங்களிலே இருந்து இங்கே வரவழைத்து, அதற்கு 20 சதவீதம் தள்ளுபடி கொடுக்கும் சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியது. ஆகவே, கைத்தறி தேக்க சூழ்நிலை இருக்காது.

பிச்சையெடுப்பதை தடுக்கும் சட்டம்.

*வினா எண் 394—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை நகரில் பிச்சையெடுப்பதைத் தடுக்கும் சட்டம் நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) பிச்சையெடுப்பதைத் தடுக்கும் சட்டம் சென்னை நகரில் நடைமுறையில் உள்ளது.

(ஆ) பிச்சைக்காரர்கள் காவல்துறையினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டு, பிச்சைக்காரர் விடுதிக்கு அனுப்பப்படுகின்றனர்.

திரு. து. புருஷோத்தமன் : அவை நாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இப்படி மரியாதையோடு கூறுவார்கள் ; எனவே அப்படிச் சொல்கிறேன். தற்போது கடந்த ஓராண்டு காலமாக சென்னை நகரிலே பிச்சைக்காரர்கள் நடமாட்டம் அதிகமாகி இருக்கிறது. குறிப்பாக தொழுநோயால் அதிகமாக பாதிக்கப்பட்டு, அந்தப் பிச்சைக்காரர்கள் நடமாட்டம் சென்னை நகரிலே அதிகமாகி இருக்கிறது. ஆகவே, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டதே, அதை மூடிவிடாமல் நடத்துகிறார்களா ? மேலும், பல பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் திறக்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS